# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் (09.09.2021) 09– ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 09.09.2021 | **பொருள் – 1**<br>தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் கடந்த ஏப்ரல் 6 ஆம் தேதி நடைபெற்றதில் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அடிப்படை வசதிகளான மின் வசதி, சாமியானா பந்தல் அமைத்தல், மற்றும் தண்ணீர் வசதி போன்ற அனைத்து வசதிகளையும் செய்யும் பணியை தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு-15-ன் கீழ் ரூ.15,445/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**:- பதிவு செய்யலாம் | **தீர்மான எண்.985**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 09.09.2021 | **பொருள் – 2**<br>இந்நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் 1 முதல் 27 வரை வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர், லாரி எண். TN45L7670 மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் மேற்கண்ட குடிநீர் லாரி பழுதடைந்து இயக்க முடியாத நிலை ஏற்பட்டு வாகனம் கழிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் குடிநீர் லாரி மூலம் குடிநீர் வழங்கும் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டதால் பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கைகளின் படி பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தனியார் குடிநீர் லாரி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இப்பணி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணிகள் மேற்கொண்டதற்கு ஆன மொத்த செலவினத்தொகை ரூ.3,56,800/-ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**:-<br>பதிவு செய்யலாம். | **தீர்மான எண்.986**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

09.09.2021

**பொருள் – 3**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021-22-ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். எனவே, இந்நகராட்சியில் உள்ள கீழ்காணும் ஒன்று பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**பணிகளின் விவரம்**

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|---|
| 1 | 20 | சிவசக்தி நகர் பூங்கா (நில அளவை எண்.567.4 **பகுதி)** | 42.00 | 36.00 | ரூ.100.00 இலட்சம் |
| 2 | 18 | மஸ்தான் தெரு, பூங்கா (நில அளவை எண்.750/4B, 751/3) | 27.00 | 17.00 | |
| 3 | 11 | அண்ணாநகர் பூங்கா (நில அளவை எண்.742/**பகுதி**, 743/**பகுதி**) | 46.00 | 41.00 | |

**அலுவலகக்குறிப்பு:-**

1. மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கையினை அனுப்பி 2021-2022 ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பின் படி பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:2755 / 2021 / இ1)

**தீர்மான எண்.987**
**அனுமதிக்கப்பட்டது**

09.09.2021

**பொருள் – 4**

மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான வார காய்கறி சந்தை 50 வருடங்களுக்கு மேலாக கட்டப்பட்ட கட்டிடமாதலால் கட்டிடம் முழுவதும் பழுதடைந்து இடித்து அப்புறப்படுத்தும் நிலையில் உள்ளது. தற்போதுள்ள வார காய்கறி சந்தையை புதிதாக மாற்றி அமைத்து தருமாறு நீண்டகாலமாக மணப்பாறை நகராட்சிக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எனவே மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திருச்சி செல்லும் சாலையின் அருகில் வார காய்கறி சந்தை அமைப்பதற்கு ரூ.650.00

**தீர்மான எண்.988**
**அனுமதிக்கப்பட்டது.**

இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 5 | மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திருச்சி செல்லும் சாலையின் அருகில் வார காய்கறி சந்தை அமைக்கும் பணி | ரூ.650.00 இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2769/2021/இ1)

---

09.09.2021

**பொருள் – 5**

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் 2021-22-ம் ஆண்டு சட்டமன்ற கூட்ட தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் போது மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துருக்கள் தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி மணப்பாறை நகராட்சிகுட்பட்ட பகுதியில் உள்ள இளைஞர்கள் போட்டி தேர்வுகளுக்கு தயாராகும் மற்றும் வேலை தேடும் இளைஞர்களுக்கு ஏதுவாக இந்நகராட்சிகுட்பட்ட வார்டு எண்.11 விராலிமலை ரோட்டில் (சாய் அக்ஷயா நகர்) சர்வே வார்டு - G, பிளாக் - 1 , T.S.No.10-பகுதி நூலகம் மற்றும் அறிவு சார் மையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.200.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு இந்நகர் மன்ற தீர்மானத்தின் படி அனுமதி பெற்று விரிவான திட்ட அறிக்கையுடன் கூடிய கருத்துரு இத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் மேற்காணும் திட்டப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதுமான நிதி இல்லாத காரணத்தினால் திட்டப்பணிகளை மேற்கொள்ள ஏதுவாக முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்தும் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2792/2021/இ1)

**தீர்மான எண்.989**
**அனுமதிக்கப்பட்டது.**

09.09.2021

**பொருள் – 6**

மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பழைய மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தினுள் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களை வகைப்படுத்தும் மையக் கட்டிடத்தில் (Covid Triage Centre Building) உள்ள கழிவறையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களிடமிருந்து வரப்பெற்ற கொரோனா நிதி (SDRF) திட்டம் 2021-22-ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 11.08.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பழைய மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தினுள் கொரோனா நோயினால் பாதிக்கப் பட்டவர்களை வகைப்படுத்தும் மையக் கட்டிடத்தில் (Covid Triage Centre Building) உள்ள கழிவறையில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுல் | 3.50 | திரு.கே.இராமசாமி | **–0.06%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் | **0.10%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.கே.இராமசாமி – 0.06% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார். எனவே திரு.கே.இராமசாமி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்:1724/2021/இ1)

**தீர்மான எண்.990**

**அனுமதிக்கப்பட்டது.**

09.09.2021

**பொருள் – 7**

மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கசடு கழிவு மேலாண்மை FSTP அமைவிட இருக்கும் இடத்தினை சுற்றி சுற்று சுவர் (Precast Slab Compound Wall) அமைக்கும் பணி மேற்கொள்ள வருவாய் நிதி திட்டம் 2021-22-ன் கீழ் பணி மேற்கொள்வதற்கு 09.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கசடு கழிவு மேலாண்மை FSTP அமைவிட இருக்கும் இடத்தினை சுற்றி சுற்று சுவர் (Precast Slab Compound Wall) அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 9.92 | திரு.கே.இராமசாமி | **–0.04%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் | **0.52%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.கே.இராமசாமி **-0.04%** மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார். எனவே திரு.கே.இராமசாமி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்:3331/2021/இ1)

**தீர்மான எண்.991**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr><td>09.09.2021</td><td>

**பொருள் – 8**

இந்நகராட்சி பொது சுகாதார லாரி TDY 1660-க்கு கிளட்ச் பிளேட் புதியதாக மாற்றம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆண்டவர் ஆட்டொ டீசல் ஒர்க்ஸ் , பைப்பாஸ் ரோடு , பொத்தமேட்டுப்பட்டி | 19,985/- |
| 2 | ஓம் முருகா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , பைப்பாஸ் ரோடு , பொத்தமேட்டுப்பட்டி | 20,340/- |
| 3 | திருச்சி தினேஷ் ஆட்டோ ஒர்க்ஸ் , திருச்சி - திண்டுக்கல் பைப்பாஸ் ரோடு, பொத்தமேட்டுப்பட்டி. | 20,620/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஆண்டவர் ஆட்டொ டீசல் ஒர்க்ஸ் , பொத்தமேட்டுப்பட்டி நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்

(2615/2021/எச்2)

</td><td>

**தீர்மான எண்.992**

**அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
<tr><td>09.09.2021</td><td>

**பொருள் – 9**

இந்நகராட்சி வார்டு எண்.5 பகுதியில் உள்ள அத்திக்குளம் - தர்மலிங்கம் தெரு பகுதியினை JCB மூலம் தூர் வாரும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீகுமரன் எர்த் மூவர்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை | 1200/- |
| 2 | JTP எர்த் மூவர்ஸ், மணப்பாறை | 1000/- |
| 3 | தனுஜா ஸ்ரீ, எர்த் மூவர்ஸ், அய்யலூர், திண்டுக்கல் | 1100/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய JTP எர்த் மூவர்ஸ், மணப்பாறை நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அனுமதிக்கலாம்

(2689/2021/எச்2)

</td><td>

**தீர்மான எண்.993**

**அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
</table>

<table>
<tr>
<td>09.09.2021</td>
<td>பொருள் – 10<br>இந்நகராட்சி திருச்சி திண்டுக்கல் பைப்பாஸ் ரோடு பகுதியில் அமைந்துள்ள உரக்கிடங்கு பகுதியினை ஹிட்டாச்சி மூலம் ஒதுக்கி வழி ஏற்படுத்திடும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>தனுஜா ஸ்ரீ, எர்த் மூவர்ஸ், அய்யலூர், திண்டுக்கல்</td><td>1800/-</td></tr>
<tr><td>2</td><td>ஸ்ரீ வாசுதேவன், எர்த் மூவர்ஸ், மதுரை ரோடு, மணப்பாறை</td><td>1900/-</td></tr>
<tr><td>3</td><td>JTP எர்த் மூவர்ஸ், மணப்பாறை</td><td>2050/-</td></tr>
</table>
மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய தனுஜா ஸ்ரீ, எர்த் மூவர்ஸ், அய்யலூர், நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண்.994<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>09.09.2021</td>
<td>பொருள் – 11<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TN45CZ0344-க்கு முன்பக்க கண்ணாடி பு தியதாக மாற்றம் செய்யவும் அதற்கு உண்டாகும் தோராய செலவினம் ரூ .4875/- பொது நிதியிலிருந்து செலவினம் செய்யவும் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2775/2021/எச்2)</td>
<td>தீர்மான எண்.995<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>09.09.2021</td>
<td>பொருள் – 12<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகன எண். TN45 BZ 7050–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யவும் பணியின் அவசர அவசியம் கருதி வாகன தயாரிப்பு நிறுவனமான சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி மூலம் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.43,000/-க்கும் செலவின தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1286/இ2/2020)</td>
<td>தீர்மான எண்.996<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>09.09.2021</td>
<td>
பொருள் – 13
மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் இந்நகராட்சி மூலமாக காவேரி நீராதாரம் மற்றும் உள்ளூர் நீராதாரங்கள் மூலமாக பொதுமக்களுக்கு குடிநீர் மற்றும் இதர உபயோகங்களுக்காக விநியோகம் செய்ய அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது மேற்படி குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகள் குழாய் கசிவுகள் மற்றும் இதர பழுதுகள் ஏற்படுவதை உடனுக்குடன் சரிசெய்து பொதுமக்களுக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டிய சூழ்நிலை உள்ளது எனவே மேற்படி பணிகளை மேற்கொள்ள வேண்டியது தற்போது அவசியமான நிலையில் உள்ளதால் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.<br>எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு<br>(ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td colspan="3">குடிநீர் நிதி</td></tr>
<tr><td>1</td><td>வார்டு எண் 1 முதல் 27 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி</td><td>9.95</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு:-
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்</li>
<li>மேற்படி பணிக்கு செலவின தொகையினை குடிநீர் நிதி 2021-2022-ன் கீழ் மேற்கொள்ளலாம்</li>
</ol>
(ந.க.எண்.3078/2021/இ1)
</td>
<td>தீர்மான எண்.997<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>09.09.2021</td>
<td>
பொருள் – 14
மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் ஆழ்துளை குழாய்கள் மற்றும் சிறு மின் விசை பம்புகள் பொருத்தப்பட்டு குடிநீர் அல்லாத உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சிறுமின் விசைபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து பொதுமக்கள் தொடர்ந்து பயன்படுத்தும் வகையில் வைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேற்படி சிறு மின் விசை பம்புகளை தற்போது பழுது பார்க்க வேண்டிய நிலை உள்ளதால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
</td>
<td>தீர்மான எண்.998<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| குடிநீர் நிதி | | |
| **1** | வார்டு எண் 1 முதல் 27 வார்டுகளில் உள்ள சிறு மின் விசை பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி | **9.95** |

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு செலவின தொகையினை குடிநீர் நிதி 2021-2022-ன் கீழ் மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.3089/2021/இ1)

---

09.09.2021

**பொருள் – 15**

**தீர்மான எண்.999 அனுமதிக்கப்பட்டது.**

எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் சேதங்களை எதிர்நோக்கும் வகையில் பொதுமக்களின் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு ஏற்படும் சேத விளைவுக்கேற்ப தேவைப்படும் உபகரணங்கள், வாடகை அடிப்படை / நேரடி கொள்முதல் மூலம் இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்களை கொண்டு உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது இதில் கீழ க்கண்ட பொருட்கள் நகராட்சிக்கு சொந்தமாக வாங்கி உபயோகப்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl.No | TO BE DISTRIBUTED OF MATERIALS | COUNTING |
|---|---|---|
| 1 | Power saw | 2 Nos |
| 2 | Dewatering motors or Sunction 3KVA Diesel pump | 2 Nos |
| 3 | Tar pauling 10mx 3m | 5 Nos |
| 4 | Torchlights | 20 Nos |
| 5 | Fogging Machine | 5 Nos |
| 6 | Sandbags | 100 Nos |
| 7 | Empty sand bags | 500 Nos |
| 8 | M.Sand | $20m^3$ |
| 9 | Casurina Poles size (10 to 13mm dia) | 200 Nos |
| 10 | Oil engine 5KVA- | 2 Nos |

<table>
<tr><td></td><td>

<u>**அலுவலகக்குறிப்பு:-**</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் விளைவுகளை எதிர்நோக்கும் வகையில் அவசர அவசியத்தினைக் கருத்தில் கொண்டு பணிகளை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும், சேத விளைவுக்கேற்ப பணிகளை மேற்கொள்ள தேவையான பொருட்களை உள்ளூர் விலைப்புள்ளிகள் கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் பெற்று உடனக்குடன் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.எண்.2783/2021/இ1)

</td><td></td></tr>
<tr><td>09.09.2021</td><td>

**பொருள் – 16**

தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021-22-ன் கீழ் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் படி மணப்பாறை நகராட்சியில் உள்ள வார்டு எண்.13 முனியவண்ணான் குளத்தை மேம்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.180.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| **1** | மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வார்டு எண்.13 முனியவண்ணான் குளத்தை மேம்படுத்துதல் பணி | ரூ.180.00 இலட்சம் |

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2887/2021/இ1)

</td><td>

**தீர்மான எண்.1000 அனுமதிக்கப்பட்டது.**

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 09.09.2021 | **பொருள் – 17**<br>மணப்பாறை நகராட்சியில் பருவகால பேரிடர்களை எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கும் இந்த காலகட்டத்தில் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் லாரி 15 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்பட்டு தற்போது மீண்டும் பழுது பார்த்து F.C செய்து உபயோகபடுத்தும் சூழ்நிலையில் இல்லாததாலும் மேற்படி பழுது பார்க்க ஆகும் செலவினம் மிக அதிகம் ஆகும் சூழ்நிலை உள்ளது. தற்போது நகராட்சி பொது சுகாதார பிரிவில் BOV வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால் 18.06.2020 வரை பயன்படுத்தப்பட்டு வந்த டம்பர் பிளேசர் லாரி பயன்பாடு இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடிநீர் டேங்கர் லாரியை தற்போது சரி செய்ய கூடுதல் கால அவகாசம் ஏற்படும் என்பதாலும் தற்போது பருவகால பேரிடரை எதிர் கொள்ள கால அவகாசம் குறைவாக உள்ளதாலும், நகராட்சியில் தற்போது உபயோகமற்ற DUMPER PLACER லாரியை டேங்கர் லாரியாக மாற்றி உபயோகிப்பது அனைத்து வகையிலும் ஏதுவாக இருப்பதோடு செலவுகளும் குறைவாக ஏற்படும் விரைவாக பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவர இயலும். எனவே மேற்படி TN 45 AZ 2257 என்கின்ற DUMPER PLACER லாரியை டேங்கர் லாரியாக மாற்றம் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.30 லட்சத்திற்கு மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1 . மன்றம்அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 3240/2021/இ1 | **தீர்மான எண்.1001**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 09.09.2021 | **பொருள் – 18**<br>மணப்பாறை நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரை உள்ள சாலைகளை அளவீடு செய்து சாலைப்பதிவேடு தயாரித்தல் மற்றும் ஜல் ஜீவன் மிஷன் (or) அம்ரூட் 2.0 குடிநீர் அபிவிருத்தி பணிகள் பற்றிய அறிக்கை தயார் செய்து அறிக்கை சமர்பிக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.2957/2020/E1 நாள்.12.08.2021 கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை தல ஆய்வு செய்து பணியினை மேற்கொள்ள போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் நிறுவனம் மூலம் பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** -<br>மன்றம்அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.1002**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 09.09.2021 | **பொருள் – 19**<br>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் திட்டப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை E-TOKEN மூலம் மேற்கொள்ளப்படுவதில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் நடவடிக்கைகளை ஆன்லைனில் மேற்கொள்ள இந்நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் பணி ஆய்வருக்கும் 2 எண்ணிக்கை E-TOKEN வாங்க வேண்டியுள்ளதால் ஒரு எண்ணிக்கை ரூ.4500 வீதம் இரண்டு எண்ணிக்கை E-TOKEN வாங்க ரூ.9000/-த்திற்கும் செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**:<br>1 . மன்றம்அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2304 /2021/இ1 | **தீர்மான எண்.1003 அனுமதிக்கப்பட்டது.** |
| 09.09.2021 | **பொருள் – 20**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள வார்டு எண்.26 தீராம்பட்டி, வார்டு எண்.1 விடத்திலாம்பட்டியில் சமுதாய கழிவறைகள் மற்றும் வார்டு எண்.19 பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிவறைகள் பழுதுபார்க்கும் பணியினை மேற்கொள்ள ரூ.9.17 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம்அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 2900 /2021/இ1 | **தீர்மான எண்.1004 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**